செ.வெ.எண்:140 நாள்:14.12.2020

**பத்திரிக்கைச் செய்தி**

**திறன் மேம்பாட்டு பயிற்சி பெற**

**ஆதிதிராவிட மாணவ/மாணவிகள் விண்ணப்பிக்கலாம்**

தாட்கோ மூலமாக இந்து ஆதிதிராவிட மாணவ / மாணவிகளுக்கு 3 மாதம் முதல் 6 மாதம் வரையிலான குறுகிய கால திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் கட்டணம் இல்லாமல் அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு தென்காசி மாவட்டத்தில் Velu Social Active Public Charitable Trust 113,Raja Gopuram Building ,Enavilakku Elathur தென்காசி மூலம் Jewellery Retail Appraiser and Valuer , Assistant Fashion Designer, Self employed Tailor ஆகிய 3 பயிற்சி அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், சில நிறுவனங்களுக்கு பயிற்சி ஆணைகள் வழங்கப்பட உள்ளது. பயிற்சி பெற சென்று வருவதற்கான அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். எனவே, பயிற்சியில் சேர விரும்பும் இந்து, ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவ/மாணவிகள் விண்ணப்பித்து பயன்பெறலாம். பயிற்சி முடித்தவுடன் மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்க மற்றும் வேலை வாய்ப்பு வழங்கிட ஆவண செய்யப்படும். இது தொடர்பான மேலும் விபரங்களுக்கு அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகம், ஏ.ஆர்.லைன் ரோடு, இலந்தகுளம், பாளையங்கோட்டை என்ற முகவரியில் நேரில் அணுகியோ அல்லது 0462-2561012 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது கைபேசி எண்.9445029481 (ம) 9444127517 களிலோ அல்லது மேற்கண்ட பயிற்சி நிறுவன முகவரியை நேரில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**